

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், ஜமீன் தண்டலம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்ற ”நலன் காக்கும் ஸ்டாலின் முகாமினை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. , தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மருந்து துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம் ஆகியோர் உள்ளனர்.

### விழுப்புரம் மாவட்டம் – அய்யூர் அகரம் பாலம் அருகில்

# சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ரு.3 லட்சம் நிதி!

## காயமடைந்தவர்களுக்கும் நிதி! முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 21 -

விழுப்புரம் மாவட்டம், சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலை, அய்யூர் அகரம் பாலம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:-

சென்னையில் நேற்று (20.9.2025) நடைபெற்ற ஆசிரியர்களுக்கான நுழைவு நிலைப் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக நான்கு அரசுப் பள்ளி ஆசிரியைகள் தங்கள் கணவர்களுடன் சென்னைக்கு காரில் சென்றுகொண்டிருந்தபோது அவர்களில் ஒருவரான திருமதி.சிவரஞ்சனி (வயது 38) க/பெ. ஜெகதீசன் மற்றொரு ஆசிரியை திருமதி. மெஹருன்னிஷா அவர்களின் கணவர் திரு.ஷாகுல் அமீது ஆகிய இருவரும் அதிகாலை சுமார் 05.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அய்யூர் அகரம் பாலம் அருகில் எதிர்பாராதவிதமாக எதிரே வந்த டேங்கர் லாரி ஒன்றின் மீது மோதியதில் பலத்த காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் காயமடைந்து முண்டியம்பா க்கம் அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.மெஹருன்னிஷா, திருமதி.பூவிழி, திருமதி.கௌசல்யா, திரு. பிரகாஷ், திரு.முருகன் மற்றும் திரு.சூரியா ஆகிய ஆறு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### சிங்கப்பூர் கழக மூத்த முன்னோடி சிங்கை சா.பழனிவேலுவின் துணைவியார் – மறைந்த

# திருமதி ப.காயாம்பு அம்மாள் திருவுருவப்படம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா திறந்து வைக்கிறார்!

மன்னார்குடி, செப். 21-

சிங்கப்பூர் தி.மு.க. மூத்த முன்னோடி, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம்,கீழத்திருப்பாலக்குடி நினைவில் வாழும் சிங்கை சா. பழனிவேலு அவர்களின் மனைவியும் நினைவில் வாழும் ப.கலையரசன் - பா.பூங்கொடி, ப.சரவணன் ஆகியோரின் தாயாரும், செய்தித்துறை ஓய்வுபெற்ற கூடுதல் இயக்குநர் ச.பாண்டியனின் மாமியாருமாகிய மன்னார்குடி காவேரி லாட்ஜ் உரிமையாளரான தி.மு.க. முதுபெரும் தொண்டர்

திருமதி ப.காயாம்பு அம்மாள் அவர்கள் கடந்த 8.9.2025 அன்று இயற்கை எய்தியதை யொட்டி அம்மையாரின் படத்திறப்பு நிகழ்வு நாளை(22.9.2025 - திங்கள்கிழமை) மாலை 6 மணிக்கு கீழத்திருப்பாலக்குடியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சியில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாநிலச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா கலந்துகொண்டு, அன்னாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து புகழுஞ்சலி செலுத்துகிறார்.

மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்துகிறார்கள்.



மாதவரம் சட்டமன்ற தொகுதி 17வது வட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் தீயம்பாக்கம் காந்திநகர் பகுதிக்கு குடிநீர் குழாய்கள் வேண்டும் என்று பொதுமக்கள் மனு கொடுத்து பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட சென்னை குடிநீர் வடிகால் வாரிய மணலி மண்டல பகுதி பொறியாளர் திருமதி. பிரதீபா , அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் துணையுடன் புதிய குடிநீர் குழாய்களை பைப்லைன் மூலம் அமைத்து கொடுத்து சீரான குடிநீர் வழங்கப்பட்டது. மேற்படி குழாய்களை பொதுமக்களே பயன்பாட்டிற்கு கொண்டு வந்த போது மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்ட செயலாளர் கே. கருணாகரன், சி. பாலாஜி, கே. சண்முகப்பிரியன்,சி. மூர்த்தி, காந்திநகர் சுந்தரம், எஸ். வாசு மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 213 வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை, செப். 21 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்க ளும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 213 வது நாள் நிகழ்ச்சியாக வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டு தல்படி உணவு வழங்கப்ப ட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்க ளுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 213 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (20.09.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 104 11வது சாலை அண்ணா நகர் மேற்கு. 2) வட்டம் 104 அ, டி.வி நகர் திருமங்கலம் சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமா சங்கர், சொ.முருகேசன், ப. லோகுபாபு, K.S.பாபு எ. வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோக ரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பா ளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்கு மார், L.சம்பத்கு மார், க.பா.பிரதீப்கு மார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோ டிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்–

# ‘சொல் புதிது’ எனும் திட்டத்தின்கீழ் 5வது கூட்டம்!

## முனைவர் ம.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப். 21-

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ‘சொல் புதிது’ என்னும் திட்டத்தின் ஐந்தாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 17.09.2025 முற்பகல் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் சிவாலயம் ஜெ. மோகன், பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், ஒப்பிலா மதிவாணன், பாரதிபாலன், சா. சரவணன், ஆ. மணவழகன், ம. இளங்கோவன், மற்றும் ராஜ் கண்ணன், மு. முருகேசன், முனைவர் அ. ஜேம்ஸ், ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் 54 சொற்கள் முடிவு செய்யப்பெற்றன.

1 ANPR camera-ஊர்தி எண் காணி, 2 Badge-அடையாள வில்லை , 3 CCTV camera -கண்காணி, 4 DSLR camera - எதிரொளிப் படக்கருவி, 5 Hawala- முறையிலாப் பரிமாற்றம், 6 Hot news- பரபரப்புச் செய்தி, 7 Infotainment - தகவல் போக்கு,8 Life style -வாழ்முறை, 9 Sport-தனி விளையாட்டு, 10. Game- விளையாட்டு / ஆட்டம்,

11.Match-போட்டி விளையாட்டு, 12. Tournament-காலநிலை விளையாட்டு, 13. Winner -வெற்றியாளர், 14 Runner -வெற்றி அண்மையர், 15 Champion -வாகையர், 16 Championship -வாகை நிலை,

17 Client-பயனி, 18 Customer-வாடிக்கையாளர், 19 Biopic-வாழ்க்கைப் படம், 20 Caravan vehicle-வசதி நிறை வண்டி, 21 Bonanza- அதிரடிப் பயன் 22 Trendy- புதுப்போக்கு, 23 Trendsetter - புதுப் போக்கு ஆக்குநர், 24 Chip -சில்லு, 25 Remake-மறு ஆக்கம், 26 Rubber stamp-ஒப்ப முத்திரை, 27 Real estate -நில வணிகம், 28 Grease-மசகு, 29 Dose-கண்டிப்பு, 30 Timeline-கால வரிசை, 31 First look-முதல் நோக்கு, 32 Lyric video-பாடல்வரிக் காட்சி, 33 First single-முதல் பாடல், 34 Gated community-காப்புக் குடியிருப்பு, 35 Academy-கலைக்கழகம்,

36 Cartoon-கருத்துப்படம், 37 Hydro carbon-ஆழ் நிலை நீர்மக் கரிமம், 38 Screen shot-திரைப் பதிவுப் படி, 39 Bumper prize-மாபெரும் பரிசு, 40 CAPTCHA-ஆளறிகுறி,

41 Showcase -காட்சிப் பேழை, 42 Biomining-நுண்ணுயிரி அகழ்வு, 43 Metacognition-மீ அறிதிறன், 44 QR code-விரைவு வினைக் குறி,

45 Hologram-முப்பரிமாண ஒளிப்படம், 46 Bonhomie-நற்பண்பு, 47 Omelette-முட்டை அடை, 48 Half boiled egg-முட்டை அப்பம், 49 Fried rice-பொரி சோறு, 50 Heartin Idly-இதய வடிவ இட்லி, 51 Tetra pack-நாலடுக்குப் பொதி / நாலடுக்குக் கட்டகம்,52 Risk-இடர், 53 Rusk-உலர் ரொட்டி, 54 Chain smoker -தொடர் புகையர்

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் கோ. சண்முகம்

**செப்டம்பர் 21 (2002)**



திருப்பத்தூர் நகரச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்புற பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா. மீனாட்சிசுந்தரம்

**செப்டம்பர் 21 (2020)**



1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.

1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “மா.மீ” என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். “எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தவர்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**